அகில இந்திய வானொலி, சென்னை-4

24 05 2024 **FRIDAY** **6.45 AM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கு ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- கம்போடியாவில் வேலைவாய்ப்பு இருப்பதாக கூறி, தவறாக அழைத்து செல்லப்பட்டு சிக்கித்தவித்த 60 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.
- சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் நடவடிக்கைகளை கேரள அரசு நிறுத்த வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

மக்களவைக்கு ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆறு மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த ஆறாம் கட்டத்தேர்தலில் 889 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 428 தொகுதிகளுக்கு இதுவரை தேர்தல் நடைபெற்றுள்ளது.

ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி 57 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் நான்காம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கிடையே, ஐந்தாம் கட்டத் தேர்தலில் 62 புள்ளி இரண்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு இன்னும் பத்து நாட்களே உள்ள நிலையில், மாநிலம் முழுவதும் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது.

தருமபுரி மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள நிலையில், அங்கு தபால் வாக்குகளை எண்ணுவது குறித்த அலுவலர்களுக்கான பயிற்சி ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் நடைபெற்றது.

சேலம் மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் ஆயிரத்து 500 அலுவலர்கள் ஈடுபட உள்ளதாக ஆட்சியர் திருமதி பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சியின்போது அவர் இதனை தெரிவித்தார்.

தூத்துக்குடியில் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி ஆட்சியர் திரு லட்சுமிபதி தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் கட்ட பயிற்சி பொது தேர்தல் பார்வையாளர் தலைமையில் அளிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கம்போடியாவில் வேலைவாய்ப்பு இருப்பதாக கூறி, தவறாக அழைத்து செல்லப்பட்ட 60 இந்தியர்களை அங்குள்ள இந்திய தூதரகம் மீட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் தாயகம் திரும்பியுள்ளதாக கம்போடியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் சிக்கித்தவித்த 60 இந்தியர்களுக்காக அங்குள்ள இந்திய தூதரகம் கம்போடிய அரசுடன் பேச்சு நடத்தி, தாயகம் திரும்புவதற்கு உதவியது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் ஆறு லட்சத்து 80 ஆயிரம் செல்போன் இணைப்புகள் போலியானவை என்று தொலைத்தொடர்புத்துறை கண்டறிந்துள்ளது.

போலியான முகவரி சான்று, அடையாள சான்று மூலம் இவைகள் பெறப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இதையடுத்து, தற்போதைய இணைப்புகளை அறுபது நாட்களுக்குள் மீண்டும் சரிபார்க்குமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்குவோரை தொலைத்தொடர்புத்துறை அறிவுறுத்தியுள்ளது.

மறுசரிபார்ப்பில் அந்த எண்கள் போலியானவை என கண்டறியப்பட்டால், உடனடியாக அவற்றுக்கான சேவை துண்டிக்கப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

கோவையில் ரசாயனம் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 16 டன் மாம்பழங்களை உணவு பாதுகாப்புத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுபோன்ற குறைகளை கண்டறிந்தால், 9 4 4 4 0 – 4 2 3 2 2 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு தகவல் தெரிவிக்குமாறு மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் திரு தமிழ்செல்வன் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - தமிழ்செல்வன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் நடவடிக்கைகளை கேரள அரசு நிறுத்தி வைக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனுக்கு எழுதியுள்ள கடிதத்தில அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த தடுப்பணை தொடர்பான திட்ட விவரங்கள் தமிழக அரசிடமோ, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமோ வழங்கப்படவில்லை என்பதையும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டம் தொடர்பான முழு விவரங்களையும் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை பணியை நிறுத்திவைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பின்னர் இது வடகிழக்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெற்று, நாளை மறுநாள் பங்களாதேஷ் மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவக்கூடும் என்று கூறியுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு பகுதிகளில் இன்று கனமுதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர் மாவட்டங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரிக்கடல், அதையொட்டிய தென் தமிழக கடல்பகுதி, மன்னார் வளைகுடா, தெற்கு மற்றும் அதனையொட்டியுள்ள மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், நாளை வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம், மேல்மலையனூர், செஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவு இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

*<u>இருவரிச்செய்திகள்</u>*

மியான்மரிலிருந்து வரும் ரோஹிங்கியா அகதிகளுக்காக மீண்டும் எல்லையை திறக்குமாறு பங்களாதேஷ் அரசை, ஐ நா கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்டுகள் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் ரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8-ஆக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பட்டப்படிப்பில் சேர விண்ணப்பங்களை அளிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 30-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குருப்-1 தேர்வு எழுத உள்ள மாணவர்கள், இலவச பயிற்சி பெற மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தை அணுகுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>>

மதுரை தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை ஆட்சியர் திருமதி சங்கீதா நேற்று தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

திருவள்ளுர் மாவட்டம் செங்குன்றத்தில் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்த வட்டார போக்குவரத்து அதிகாரிகள், தரமற்ற நான்கு பள்ளி பேருந்துகளின் உரிமங்களை ரத்து செய்தனர்.

<<<<<<>>>>>>

கரூர் மாவட்டம் குளித்தலையில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து இரண்டு பேரை கைது செய்தனர்.

–

கோவை மாவட்டம் வனப்பகுதியில் நேற்று தொடங்கிய கோடைகால யானைகள் கணக்கெடுக்கும் பணியில் 50-க்கும் மேற்பட்ட வன ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

குன்னூர் சிம்ஸ் பூங்காவில், பழக்கண்காட்சி இன்று தொடங்கி, மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

**Kachreti** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - துருக்கியின் **Yanki Erel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜார்ஜியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Pruchya Isaro** – கனடாவின் **Kelsey Stevenson** இணையை வென்றது.

<<<<<<>>>>>>

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இன்று நடைபெறும் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் இந்தியாவின் பி வி சிந்து – சீனாவின் **Yue Han** –யும், **Ashmita Chaliha** – சீனாவின் **Yi Man Zhang**-யும் எதிர்கொள்கின்றனர்.

**<<<<<<>>>>>>**

இந்திய வட்டு எறிதல் வீரர் **Monu Ghangas** பாரிஸில் நடைபெறவுள்ள பாராலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஜப்பானின் **Kobe** நகரில் நடைபெற்றுவரும் உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் 34 புள்ளி 7 மீட்டர் தூரத்திற்கு வட்டு எறிந்து நான்காம் இடத்தை பெற்றதன் மூலம் அவர் இத்தகுதியை அடைந்தார்.

**<<<<<<>>>>>>**

பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் புரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவில் பெல்ஜியம் 2-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

நள்ளிரவு நடைபெற்ற ஆடவர் பிரிவில் இந்தியா 1-4 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்திடம் தோல்வியடைந்து.

**<<<<<<>>>>>>**